# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අති විශෙෂ** அதி விசேஷமானது

අංක 1733/52 - 2011 නොවැම්බර් 25 වැනි සිකුරාදා - 2011.11.25

**1733/ 52 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை - 2011.11.25**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**
**அமைச்சரவையினால் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு 57ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களை கையளித்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம்

இதற்கான அட்டவணை Iஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அரச அலுவலர்கள் தொடர்பாக அட்டவணை IIIஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அரச அலுவலர்களின் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம் அவர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கல் அதிகாரங்களை அட்டவணை IIஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அரச அலுவலர்களுக்கு அமைச்சரவையினால் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் இத்தால் கையளிக்கப்படுகின்றன.

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள ஏதேனும் அதிகாரங்களை கையளித்தல் பற்றிய விடயங்கள் தொடர்பாக அல்லது ஆணைக்குழுவினால் அவ்வாறு மேற்கொள்ளப்படுவதற்காக ஏதேனும் கையளிக்கப்பட்ட அதிகாரங்களை செயல்படுத்துதல் விடயமாக அல்லது ஏதேனும் வினாக்கள் எழும் சந்தர்ப்பங்களில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதியானதும், உறுதியானதுமாக அமையும்.

இதற்கு மேலதிகமாக IIஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அரச அலுவலர்கள் Iஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அரச அலுவலர்களுக்கு எதிராக ஏதேனும் ஒழுக்காற்று விசாரணையின்போது முறைப்பாட்டாளராகவோ அல்லது சாட்சியாளராகவோ அல்லது பலமுள்ள சாட்சிகாரராகவோ எனின் அரசாங்க சேவை ஆணைக்குழு தம்மால் செய்யப்பட வேண்டியுள்ள அதிகாரங்கள் எதனையும் நோக்காது அட்டவணை IIIஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு இணங்க நியமனம் பதவி உயர்வு இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கல் அதிகாரங்களை அது தொடர்பாக ஒருவிதமான அதிகாரமும் கையளிக்கப்படவில்லை எனக்கருதி தொடர்ந்தும் செயல்படுத்தும்.

2. ஆணைக்குழுவினால் அரச அலுவலர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை செயல்படுத்தும்போது அந்த அரச அலுவலரினால் எடுக்கப்படும் அனைத்து தீர்மானங்களும் அரசியல் யாப்பின் 58ஆம் உறுப்புரையின் சட்ட விதிகளுக்கு அமைய செயல்படுத்த வேண்டுமென இங்கு ஆணைக்குழுவினால் விசேடமாக குறிப்பிடப்படுகின்றது.

3. மேற்குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களை கையளிக்கப்பட்டுள்ள குறித்த அரச அலுவலர்கள் அவ்வலுவலர்களினால் தம்மிடம் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை செயல்படுத்தும் எல்லா சந்தர்ப்பங்களிலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அரசியல் யாப்பின் 61(ஆ) மற்றும் 58(1) ஆகிய உறுப்புரைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அரச அலுவலர்களின் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம் சம்பந்தமான திட்டங்களுக்கு அமைவாக அதில் ஆணைக்குழுவினால் அடிக்கடி தீர்மானம் பெறப்பட்ட ஏதேனும் நிபந்தனைகள் விதிகள் கட்டளைகள் மற்றும் வேறு செயல் திட்டங்களுக்கு இசைவாக செயல்பட வேண்டுமென ஆணைக்குழுவினால் இங்கு உறுதியாக தெளிவுபடுத்தப்படுகின்றது.

எவ்வாறாயினும் அரச சேவைக்கு உரித்தான செயல் திட்ட விதிகளுக்கு ஊடாக கருதப்படாத விடயம் சம்பந்தமான ஏதேனும் விதிகள் கட்டளைகள், செயல்திட்டம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால், வெளியிடும்வரை அரசியல் யாப்பின் பதினெட்டாவது திருத்தச் சட்டம் செயல்படுத்தப்படும் திகதிக்கு செயல்படுத்திய அரச சேவை மற்றும் சம்பந்தப்பட்ட வேறு சகல சட்ட விதிகள், கட்டளைகள் மற்றும்

செயல்திட்டம், தேவையான மாற்றங்கள் உட்பட, அதில் ஆணைக்குழுவினால் சட்டமாக்கப்பட்ட அல்லது கவனத்திற்குட்படுத்திய சட்டங்கள் கட்டளைகள் மற்றும் செயல்திட்டங்களாக கருதி தொடர்ந்து செயல்படுத்த வேண்டுமென்பதோடு, அவை அரச சேவை தொடர்பானதாகவும் இருத்தல் வேண்டும்.

4. அரசியலமைப்பின் 55ஆவது உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்ட அதிகாரங்களை இங்கு, அட்டவணையில் குறிப்பிடப்படாதுள்ள அரச அலுவலர்கள் தொடர்பில் அவ்வாணைக்குழு வினால் நேரடியாக செயற்படுத்தக் கூடியனவாகும்.

5. இந்த அதிகாரங்கள் 2012ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி தொடக்கம் செயல்படுத்தப்பட வேண்டும் எனவும் அதே திகதியிலிருந்து செயல்படும் வண்ணம் 2003, யூலை மாதம் 02ஆந் திகதிய இல. 1295/26 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப்பட்டுள்ள அதிகாரங்களை கையளித்தல், 2006, யூன் மாதம் 13ஆந் திகதிய இல. 1449/12 கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிக்கையில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அதிகாரங்களை கையளித்தலின் கீழ் எடுக்கப்பட்ட, அல்லது எடுக்கப்படலாம் எனக் கருதக்கூடிய ஏதேனும் வழிகாட்டல்கள் தப்பபிப்ராயம் இன்றி செயல்படுத்துவதற்கு ஆணைக்குழுவினால் இங்கு உறுதியாக தெளிவுபடுத்தப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

ரி.எம்.எல்.சி.சேனாரத்ன
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல. 177, நாவல வீதி, நாரஹேன்பிட்ட,
கொழும்பு 05.
2011, நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி.

## *அட்டவணை*
## பகுதி I

**அதிகாரங்களை கையளித்தல் - இலங்கை பொலிஸ் சேவையின் உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்கள்**

| நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 1. பின்வரும் அகில இலங்கைச் சேவைகளைச் சேர்ந்த வகுப்பு Iக்கும் அல்லது தரம் Iக்கும் உரிய அத்துடன் அதற்கும் மேலான உத்தியோகத்தர்கள்<br>(அ) இலங்கை நிருவாக சேவை<br>(ஆ) இலங்கை பொறியியலாளர் சேவை<br>(இ) இலங்கை விஞ்ஞானவியல் சேவை<br>(ஈ) இலங்கை கட்டிடக்கலைஞர் சேவை | அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவான இடமாற்றம்<br>(II) தாபன விதிக் கோவை யின் XLVIIIஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை<br>(III) 57 வயதுக்கு அப்பாலான சேவை நீடிப்பு |

ஆட்டவணை (எதாடர்ச்சி)

| நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| (உ) இலங்கை கல்வி நிருவாக சேவை | கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவான இடமாற்றம்<br>(II) தாபன விதிக் கோவையின் XLVIIIஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை<br>(III) 57 வயதுக்கு அப்பாலான சேவை நீடிப்பு |
| (ஊ) இலங்கை கணக்காளர் சேவை | திறைசேரியின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஒருவர் | |
| (எ) இலங்கை திட்டமிடல் சேவை | திட்டமிடல் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/அமைச்சு செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படும் மேலதிக செயலாளர் பதவியை விட குறைந்த பதவியொன்றாகாத, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் உத்தியோகத்தர் | |
| (ஏ) இலங்கை விலங்கு உற்பத்தி சுகாதார சேவை | கால்நடை அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | |
| (ஐ) இலங்கை மருத்துவ சேவை | சுகாதாரம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | |
| (ஒ) இலங்கை சுதேச மருத்துவ சேவை | சுதேச மருத்துவம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | |
| (ஓ) இலங்கை அளவையாளர் சேவை | காணி அளவை என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | |
| (ஔ) இலங்கை கமத்தொழில் சேவை | கமத்தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | |
| 2 பின்வரும் அகில இலங்கைச் சேவைகளைச் சேர்ந்த வகுப்பு- I க்கு அல்லது தரம்-I க்கு குறைவான உத்தியோகத்தர்கள்<br>(அ) இலங்கை நிருவாக சேவை<br>(ஆ) இலங்கை பொறியியலாளர் சேவை<br>(இ) இலங்கை விஞ்ஞான சேவை<br>(ஈ) இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை | அரசாங்க நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவான இடமாற்றம்<br>(II) தாபன விதிக் கோவையின் XLVIIIஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை<br>(III) 57 வயதுக்கு அப்பாலான சேவை நீடிப்பு |

ஆட்டவணை (எதாடர்ச்சி)

| நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| (உ) இலங்கை கல்வி நிருவாக சேவை | கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சுச் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக செயலாளர் ஒருவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவான இடமாற்றம்<br><br>(II) தாபன விதிக் கோவையின் XLVIIIஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை<br><br>(III) 57 வயதுக்கு அப்பாலான சேவை நீடிப்பு |
| (ஊ) இலங்கை கணக்காளர் சேவை | திறைசேரியின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட திறைசேரியின் பிரதிச் செயலாளர் | |
| (எ) இலங்கை திட்டமிடல் சேவை | திட்டமிடல் என்னும் விடயத்திற்குப் பொறுப் பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சுச் செயலாளரினால் பெயர் குறிப் பிடப்படும் மேலதிக செயலாளர் பதவியை விட குறைந்த பதவியொன்றாகாத, அர சாங்க சேவை ஆணைக்குழு வினால் அங்கீ கரிக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவர் | |
| (ஏ) இலங்கை விலங்கு உற்பத்தி, சுகாதார சேவை | கால்நடை அபிவிருத்தி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | |
| (ஐ) இலங்கை மருத்துவ சேவை | சுகாதாரம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சரின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டு, மேலதிக செயல-ாளர் பதவியை விட குறைந்த பதவியொன்றாகாத, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | |
| (ஒ) இலங்கை சுதேச மருத்துவ சேவை | சுதேச மருத்துவம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | |
| (ஓ) இலங்கை அளவையாளர் சேவை | காணி அளவை என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | |
| (ஔ) இலங்கை கமத்தொழில் சேவை | கமத்தொழில் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | |

ஆட்டவணை (எதாடர்ச்சி)

| நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 3. அகில இலங்கைச் சேவைகளைச் சாராத, 06/2006ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோரப்பட்டுள்ள வகுப்பு– I க்கும் அதற்கு மேலான சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | இயைபுள்ள அமைச்சின் செயலாளர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நுடவடிக்கை முறைகளுக்கு அமைவான இடமாற்றம்<br>(II) தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை<br>(III) 57 வயதுக்கு அப்பாலான சேவை நீடிப்பு |
| 4. அகில இலங்கைச் சேவைகளைச் சாராத, 06/2006ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோரப்பட்டுள்ள வகுப்பு– I க்குக் கீழான சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | இயைபுள்ள அமைச்சின் செயலாளர் / இயைபுள்ள அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவான இடமாற்றம்<br>(II) தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை<br>(III) 57 வயதுக்கு அப்பாலான சேவை நீடிப்பு |
| 5. அகில இலங்கைச் சேவைகளைச் சாராததும், அமைச்சொன்றின் கீழ் வராததுமான 06/2006ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையில் (இணைப்பு 11) பொருள் கோரப்பட்டுள்ள சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | இயைபுள்ள திணைக்களத் தலைவர் | (I) அரசாங்க சேவை-ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவான இடமாற்றம்<br>(II) தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை<br>(III) 57 வயதுக்கு அப்பாலான சேவை நீடிப்பு |

ஆட்டவணை (எதாடர்ச்சி)

| நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 6. 06/2006ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக் கையில் (இணைப்பு II) பொருள் கோரப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதியுயர் தரத்தைச் சேர்ந்த/ விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | இயைபுள்ள அமைச்சின் செயல-ாளர்/ இயைபுள்ள அமைச்சின் செயலாளரி-னால் பெயர் குறிப்பிடப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவான இடமாற்றம்<br>(II) தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை<br>(III) 57 வயதுக்கு அப்பாலான சேவை நீடிப்பு |
| 7. அமைச்சொன்றின் கீழ் வராததுமான 06/2006ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையில் (இணைப்பு 11) பொருள் கோரப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதியுயர் தரத்தைச் சேர்ந்த / விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | இயைபுள்ள திணைக்களத் தலைவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவான இடமாற்றம்<br>(II) தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை<br>(III) 57 வயதுக்கு அப்பாலான சேவை நீடிப்பு |
| 8. அதியுயர் தரத்தைச் சேர்ந்த/ விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் தவிர்ந்த 06/2006ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக் கையில் (இணைப்பு II பொருள் கோரப்பட்டுள்ள மூன்றாம் மட்ட உத்தியோகத்தர்கள் | இயைபுள்ள திணைக்களத் தலைவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டங்களுக்கு/ சேவை பிரமாணக் குறிப்புகளுக்கு அமைவான நியமனம்/ பதவி உயர்வு<br>(II) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவான இடமாற்றம்<br>(III) ஒழுக்காற்று நடவடிக்கையும் பதவி நீக்கலும் |

ஆட்டவணை (எதாடர்ச்சி)

| நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 9. இணைந்த சேவைகளைச் சேர்ந்த 06/2006 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் பொருள் கோரப்பட்டுள்ள ஆரம்ப மற்றும் இரண்டாம் மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு/ சேவை பிரமாணக் குறிப்புக ளுக்கு அமைவான நியமனம்/ பதவி உயர்வு<br>(II) அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட முறைகளுக்கு அமைவான இடமாற்றம்<br>(III) ஒழுக்காற்று நடவடிக்கையும் பதவி நீக்கலும் |
| 10. இணைந்த சேவைகளைச் சாராத 06/2006 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் பொருள் கோரப்பட்டுள்ள ஆரம்ப மற்றும் இரண்டாம் மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | அந்தந்த திணைக்களத் தலைவர்கள் | (I) அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்க ளுக்கு/சேவை பிரமாணக் குறிப்புகளுக்கு அமைவான நியமனம்/பதவி உயர்வு<br>(II) அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவான இடமாற்றம்<br>(III) ஒழுக்காற்று நடவடிக்கையும் பதவி நீக்கலும் |
| 11. இணைந்த சேவைகளைச் சாராத இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் சிவில் நிருவாகத்தின் கீழ் வரும் 06/2006ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் பொருள் கோரப்பட்டுள்ள ஆரம்ப மட்ட, இரண்டாம் மட்ட, மூன்றாம் மட்ட உத்தி யோகத்தர்கள் | இலங்கை இராணுவம், விமானப்படை, கடற்படை ஆகியவற்றின் சிவில் நிருவாகத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் | (I) அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்க ளுக்கு/ சேவை பிரமாணக் குறிப்புகளுக்கு அமைவான நியமனம்/ பதவி உயர்வு<br>(II) அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவான இடமாற்றம்<br>(III) ஒழுக்காற்று நடவடிக்கையும் பதவி நீக்கலும் |

ஆட்டவணை (எதாடர்ச்சி)

| நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 12. கல்வி என்னும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழுள்ள தேசியப் பாடசாலைகளுக்கு அல்லது நிறுவனங்களுக்கு உரிய இலங்கை அதிபர் சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் தேசிய பாடசாலைகளின் அதிபர்களும் | கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவான இடமாற்றம்<br>(II) தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை<br>(III) 57 வயதுக்கு அப்பாலான சேவை நீடிப்பு |
| 13. கல்வி என்னும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழுள்ள தேசியப்பாடசாலைகளில் அல்லது நிறுவனங்களில் பின்வரும் வகுதிகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்:<br>(அ) இலங்கை அதிபர் சேவையின் I ஆம் தரத்திற்கு கீழுள்ள உத்தியோகத்தர்கள் | (1) கல்வி என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளர் | (I) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டத்துக்கு / சேவை பிரமாணக்குறிப்புக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்<br>(II) ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும் பதவி நீக்கலும் |
| (ஆ) இலங்கை ஆசிரியர் சேவையிலுள்ள ஆசிரியர்கள்<br>(இ) தேசியப்பாடசாலைகளில் அல்லது கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் இணைந்த சேவைகள் அல்லது இந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய வகுதிகளைச் சாராத 06/2006ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் பொருள் கோரப்பட்டுள்ள ஆரம்ப மட்ட, இரண்டாம் மட்ட, மூன்றாம் மட்ட உத்தியோகத்தர்கள் | (2) கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் செயலாளர்/ அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவான இடமாற்றம்<br>(II) தாபன விதிக்கோவையின் XLVIIIஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை<br>(III) 57 வயதுக்கு அப்பாலான சேவை நீடிப்பு |

ஆட்டவணை (எதாடர்ச்சி)

| நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 14. இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையின் அதியுயர் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | உள்நாட்டு அலுவல்கள் என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளர்/செயலாளரால் நியமிக்கப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட மேலதிக செயலாளர் | (I) அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவான இடமாற்றம்<br>(II) தாபன விதிக்கோவை XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்றுக் நடவடிக்கை<br>(III) 57 வயதுக்கு அப்பாலான சேவை நீடிப்பு |
| 15. இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையின் அதியுயர் வகுப்புக்குக் குறைந்த உத்தியோகத்தர்கள் | (1) உள்நாட்டலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | (I) அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டங்களுக்கு/ சேவை பிரமாணக் குறிப்புகளுக்கு அமைவான நியமனம் /பதவி உயர்வு<br>(II) ஒழுக்காற்று நடவடிக்கையும் பதவி நீக்கலும் |
| | (2) உள்நாட்டலுவல்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவான மாவட்டத்துக்கு வெளியேயான இடமாற்றம்<br>(II) 57 வயதிற்கு அப்பாலான சேவை நீடிப்பு |
| | (3) இயைபுள்ள மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவான இயைபுள்ள நிருவாக மாவட்டத்திற்குள் செய்யப்படும் இடமாற்றம்<br>(II) பதவி நீக்கல் தவிர்ந்த ஒழுக்காற்று நடவடிக்கை<br>(III) 57 வயதிற்கு அப்பாலான சேவை நீடிப்பு |
| | (4) இயைபுள்ள பிரதேச செயலாளர்/ உதவி அரசாங்க அதிபர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவாக இயைபுள்ள பிரதேசச் செயலக/ உதவி அரசாங்க அதிபர் அதிகாரப் பிரதேசத்திற்குள் செய்யப்படும் இடமாற்றம் |

ஆட்டவணை (எதாடர்ச்சி)

## பகுதி-II

## அதிகாரங்களைக் கையளித்தல் - இலங்கை பொலிஸ் சேவையின்/பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள்

| நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 1. உதவிப் பொலிஸ் அத்தியட்சகரும் அதற்கு மேற்பட்ட வரிசையினரும் | பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | (I) அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவான இடமாற்றம்<br><br>(II) தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை<br><br>(III) 57 வயதுக்கு அப்பாலான சேவை நீடிப்பு |
| 2. பிரதான பொலிஸ் பரிசோதகரும் அதற்கு குறைந்த வரிசையினரும் (பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளும் அடங்கலாக)<br><br>அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்<br><br>பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர்கள்<br><br>சிவில் துணைச் சேவை உத்தியோகத்தர்கள்<br><br>இணைந்த சேவைகளைச் சாராத 06/2006 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோரப்பட்டுள்ள ஆரம்ப மற்றும் இரண்டாம் மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | (I) பொலிஸ் மா அதிபர் | (I) அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத்திட்டத்துக்கு/ சேவை பிரமாணக்குறிப்புக்கு அமைவான நியமனம்/ பதவி உயர்வு<br><br>(II) தகுதிகூர் காலத்தில் நியமனத்தினை இரத்துச் செய்தல் அல்லது சேவையை முடிவுறுத்துதல்<br><br>(III) அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவான இடமாற்றம்<br><br>(IV) ஒழுக்காற்று நடவடிக்கையும் பதவி நீக்கலும்<br><br>(V) இடைநிறுத்தம் |

ஆட்டவணை (எதாடர்ச்சி)

| நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 3. பிரதான பொலிஸ் பரிசோத கரும் அல்லது அதற்கு குறைந்த வரிசையினரும்<br>அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்<br>பொலிஸ் பாதுகாப்பு உதவியா ளர்கள்<br>சிவில் துணைச் சேவை உத்தியோகத்தர்கள் | (1) பொலிஸ் மா அதிபர்/ சிரேஷ்ட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் (நிருவாகம்) | (I) தகுதிகாண் காலத்தின் பின் அல்லது பதிற் கடமை யாற்றும் காலத்தின் பின் நியமனத்தில் உறுதிப்படுத்தல்<br>(II) சேவையிலிருந்து இராஜினாமா கடிதங்களை ஏற்றுக் கொள் ளல் அல்லது நிராகரித்தல்<br>(III) 57 வயதுக்கு அப்பாலான சேவை நீடிப்பு |
| இணைந்த சேவைகளைச் சாராத 06/2006 ஆம் இலக்கமுடைய அர சாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோரப் பட்டுள்ள ஆரம்ப மற்றும் இரண் டாம் மட்டத்தைச் சேர்ந்த உத்தி யோகத்தர்கள் | (2) பொலிஸ் மா அதிபர்/ சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (அவருடைய நிருவாக அதிகாரப் பிரதேசத்திற்குள்) | (I) உத்தியோகத்தர் ஒருவரின் அடுத்த உயர்நிலை அல்லது தரம் அல்லது பதவிக்கான பதவியுயர்வின் பின் அவரு டைய ஒரு வருடத்துக்கு மேலான கட்டாய பதில் கடமையாற்றும் காலப்பகு தியை நீடித்தல்<br>(II) வினைத்திறமைகாண் தடை தேவைகளைப் பூர்த்தி செய் யும் பொருட்டு ஆகக்கூடுத லாக மூன்று (03) வருடங் களைக் கொண்ட காலப்பகுதி வரை நீடித்தல் |
| | (3) சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் | (I) அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட நடவடிக்கை முறைகளு க்கு அமைவாக சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருக் குரிய நிருவாகப் பிரிவிற்குள் செய்யப்படும் இடமாற்றம் (பிரதான பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் தவிர)<br>(II) பின்வரும் விடயங்கள், அதா வது<br>i. பதவி நீக்கம்:<br>ii. தகுதிகூர் காலத்தில் நிய மனத்தினை இரத்துச் செய் தல் அல்லது சேவையை முடிவுறுத்துதல்; அத்துடன்<br>iii. பதவியை வெறிதாக்கல் கட்டளைக்கு எதிரான மேன் முறையீடுகளை பரிசீலனை செய்தல்<br>தவிர்ந்த, அவர்களுடைய நிரு வாக அதிகாரப் பிரதேசத்திற் குள்ளான ஒழுக்காற்று நடவடிக்கை (பிரதான பொலிஸ் பரிசோதகர்கள் தவிர) |

| நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| | (4) சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் | அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவாக பிரதி பொலிஸ் மா அதிபருக்குரிய நிருவாகப் பிரிவிற்குள் செய்யப்படும் இடமாற்றம் (பிரதான பொலிஸ் பரிசோதகர்களும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் தவிர) |
| 4. பொலிஸ் பரிசோதகர் உட்பட அதற்கு குறைந்த வரிசையினரும்<br>அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்<br>பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர்கள்<br>சிவில் துணைச் சேவை உத்தியோகத்தர்கள்<br>இணைந்த சேவைகளைச் சாராத 06/2006 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோரப்பட்டுள்ள ஆரம்ப மற்றும் இரண்டாம் மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் (பொலிஸ் அத்தியட்சகர் - தரம் I)<br>பொலிஸ் அத்தியட்சகர் | அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கு அமைவாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்குரிய (பொலிஸ் அத்தியட்சகர் - தரம் I பொலிஸ் அத்தியட்சகர்) நிருவாகப் பிரிவிற்குள் செய்யப்படும் இடமாற்றம் (பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் தவிர) |
| 5. பொலிஸ் பரிசோதகர் உட்பட அதற்கு குறைந்த வரிசையி-னரும்<br>அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்<br>பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர்கள்<br>சிவில் துணைச் சேவை உத்தியோகத்தர்கள்<br>இணைந்த சேவைகளைச் சாராத 06/2006 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் (இணைப்பு II) பொருள் கோரப்பட்டுள்ள ஆரம்ப மற்றும் இரண்டாம் மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்<br>பிரதிப் பொலிஸ் மா அதிபர்<br>சிரேஷ்ட்ட பொலிஸ் அத்தியட்சகர் (பொலிஸ் அத்தியட்சகர் - தரம் I)<br>பொலிஸ் அத்தியட்சகர்<br>உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் | இயைபுள்ள நிருவாக அதிகாரப் பிரதேசத்திற்குள் சேவையிலிருந்து இடை நிறுத்தல்<br>இயைபுள்ள நிருவாக அதிகாரப் பிரதேசத்திற்குள் ஒழுக்காற்று அறைத் தண்டனைகள் |



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது